043

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி நிகழ்ச்சித்திட்டம்

இறுதிப் பரீட்சை – 2008

**ESP 2255 –** கல்வியில் சமகால எழுவினாக்கள்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 31.05.2008 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12..30

மூன்று(03) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கவும்.

01. இலங்கையில் கல்வியை சனநாயகப் படுத்தலில் பின்வரும் தீர்மானங்களின் பங்களிப்பு பற்றி விமர்சனரீதியாக பரிசீலிக்குக.

- சகலருக்கும் இலவசமாகக் கல்வி வழங்கப்பட வேண்டும்.
- கல்வி வழங்கும் பொறுப்பு அரசிடம் இருத்தல் வேண்டும்.
- கல்வியானது தாய்மொழியில் வழங்கப்பட வேண்டும்.

(33 புள்ளிகள்)

02. "ஒப்புரவின்மை (நியாயத்துவமின்மை)க்கு வழிவகுக்கும் சமூக ரீதியான பின்தங்கிய நிலைமையானது கல்வி முறைமையில் நிலவும் ஒப்புரவின்மைகளால் இன்னும் மோசமடைகிறது என்பதை அழுத்திக் கூறுவது முக்கியமானது. ஆசிரியர்களால் இந்த ஒப்புரவின்மையினை முற்றாகத் துடைத்தெறியமுடியாவிடினும் இவற்றைக் குறைப்பதற்கு அவர்களால் பங்களிக்க முடியும். சனநாயகப்படுத்தல், பால்நிலை சமத்துவம் ஒதுக்கி வைப்பதைக் குறைத்தல், உள்வாங்குதல் ஆகியவற்றுக்கு கல்வியில் ஒப்புரவை அடைதல் அவசியம். இதனை அடைவதற்கு தொடர்ச்சியாக தடையாக இருக்கக்கூடிய எழுவினாக்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் நாம் விரும்பும் நோக்கங்களை அடைவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணமுடியும்."

மேற்படி கூற்றின் அடிப்படையில் பின்வருவனவற்றைப் பரிசீலிக்குக.

(i) கல்வியில் ஒப்புரவு என்னும் எழுவினாவின் பன்முகத்தன்மை.

(11 புள்ளிகள்)

(ii) கல்வி என்னும் உரிமை ஏன் அனைவருக்கும் உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும்? இலங்கையை விசேடமாகக் கொண்டு இந்த உரிமையை உறுதிப்படுத்துவதில் தடையாக இருக்கக்கூடிய காரணிகளை இனங்காண்க.

(11 புள்ளிகள்)

(iii) கல்வியில் ஒப்புரவை உறுதிப்படுத்த இலங்கையில் பாடசாலை மட்டத்தில் அமுல் படுத்தக்கூடிய ஏற்பாடுகளை முன்மொழிக.
(11 புள்ளிகள்)

03. (i) "தரம்" என்பதை வரைவிலக்கணப்படுத்துக
(05 புள்ளிகள்)

(ii) இலங்கையில் கல்வி முறைமையில் தர உறுதிப்பாட்டை ஒரு பிரச்சினையாக நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள் என்பதை உதாரணங்களுடன் பரிசீலிக்க.
(13 புள்ளிகள்)

(iii) இப்பிரச்சினையை தீர்ப்பதில் ஓர் ஆசிரிய கல்வியாளர் என்ற அடிப்படையில் நீங்கள் கையாளக்கூடிய தந்திரோபாயங்களை விபரிக்குக.
(15 புள்ளிகள்)

04. (i) "பல்லின சமூகங்கள்" , "பல்லின கலாசாரக்கல்வி" என்னும் பதங்களை வரையறைப்படுத்துக. (28புள்ளிகள்)

(ii) தேசிய ஒன்றிணைப்பை மேம்படுத்துவதற்கு பல்லின – கலாசார கல்வியை பல்லின சமூகங்களில் அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவத்தை பரிசீலிக்குக. (12புள்ளிகள்)

(iii) பல்லின சமூகத்தில் தேசிய ஒன்றிணைப்பை மேம்படுத்துவதற்கு வகுப்பறை மட்டத்தில் ஆசிரியர்கள் பயன்படுத்தக்கூடிய தந்திரோபாயங்களை உதாரணங்களுடன் விளக்குக.
(13 புள்ளிகள்)

05. (i) "பூகோள மயமாக்கம்" என்பதை நீங்கள் எவ்வாறு வரையறை செய்வீர்கள்? (05 புள்ளிகள்)

(ii) இலங்கையில் பூகோள மயமாக்கத்தினால் ஏற்பட்ட குறிப்பிடக்கூடிய ஐந்து தாக்கங்களைப் பெயரிடுக. (10 புள்ளிகள்)

(iii) இலங்கையின் கல்வி முறைமையில் பூகோளமயமாக்கம் எவ்வாறு மாற்றங்களுக்கு இட்டுச்சென்றுள்ளது என்பதை விளக்குக.
(10 புள்ளிகள்)

(iv) கல்வியில் சமத்துவம் என்னும் இலக்கினை பலி கொடுக்காமல் பூகோளமயமாக்கத்தின் தாக்கங்களை இலங்கைக் கல்வி முறைமை எவ்வாறு முகாமை செய்யமுடியும் என்பதற்கு மூன்று தந்திரோபாயங்களை முன்மொழிந்து விபரிக்குக.
(08 புள்ளிகள்)

06. “….நாம் அறிந்த உலகை விட எதிர்கால உலகம் அடிப்படையில் வேறுபட்டதாக இருக்க வேண்டும். நாம் புதிய புத்தாயிரம் ஆண்டில் அடிஎடுத்து வைக்கும் போது நாம் ஒரு “நிலைபேண்தரு எதிர்காலத்தை” கட்டி எழுப்ப முயல வேண்டும். … எதிர்காலத்தில் எமது இயற்கை சூழலுடனான ஒத்திசைவு என்பதே எமது தாரக மந்திரமாக இருக்க வேண்டும்…” (Federico Mayer, DG, UNESCO, 1999)

(i) இயற்கை சூழலைப் பொறுத்தமட்டில் “நிலைபேண்தகு எதிர்காலம்” என்றால் என்ன?

(08 புள்ளிகள்)

(ii) இன்றைய உலகில் மேலெழும்புகின்ற பிரதான சூழல்சார் எழுவினாக்களை விளக்குக. (10 புள்ளிகள்)

(iii) இயற்கை சூழலுடனான ஒத்திசைவை விருத்தி செய்யக்கூடிய வகையில் கல்வி கொள்கையினையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் மீள வடிவமைப்பதில் கல்வியின் வகிபங்கு யாது என்பதை உதாரணங்கள் தந்து ஆராய்க.

(15 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)